**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 176/2019 |
| Name | : Malathi |
| P.W. | : 5 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.07.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கோவை மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.05.2016 அன்று உடுமலை பகுதி அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணிபுரிந்த போது TN 41 X 0213 என்ற மோட்டர் சைக்கிள் without gear வாகனம் ஆய்வு செய்தேன். ஆய்வில் வாகனத்தின் இடது மற்றும் வலது பக்க இண்டிகேட்டர் உடைந்திருந்தது. இடது பக்க மற்றும் வலது பக்க புட் ரெஸ்ட் வளைந்திருந்தது. ஹெட் லைட் டும் வலது பக்கம் கீறல் இருந்தது. வாகனத்தின் ஸ்டீயரிங் மற்றும் டயர்கள் நல்ல நிலையில் இருந்தது. இந்த விபத்தானது எந்த விதமான இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என சான்று வழங்கினேன். **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) மேற்படி வாகனம் தன்னிச்சையாகவோ அல்லது வேறு நபர்கள் குறுக்கே வந்து

கீழே விழும்போது நான் சொன்ன சேதாரங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். நான் ஆய்வு செய்யும் போது வாகனத்தில் எந்த விதமான இயந்திர கோளாறும் இல்லை. நான் வாகனத்தை சரிவர ஆய்வு செய்யாமல் பொய்யாக ஆய்வறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்